மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரன், அமைச்சர் பரிசீலிக்கலாம் என்று சொல்லிவிட்டார்.

திரு. சி. ஞானசேகரன்: முடித்துவிடுகிறேன். ஆகவே, அந்தக் குத்தகைதாரர்களின் குத்தகையை cancel செய்துவிட்டு, மீண்டும் நகராட்சியே எடுத்து, அந்த இடத்தில் கொண்டுபோய் குப்பைகளை எல்லாம் கொட்டுவதற்கு நகராட்சி ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அமைச்சரைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையைச் செயல்படுத்துவதற்கும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதன வசதி என்ற ஒரு முறையை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அது என்ன முறை என்பதைத் தயவுசெய்து விளக்குவாரா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்பதன இருப்பறையுடன் மீன் மார்க்கெட் என்று சொல்கிறார்கள். அதாவது கழிவுகளையெல்லாம் அந்த அறையிலேயே வைப்பது. கழிவுகளை எல்லாம் வெளியே துர்நாற்றம் ஏற்படாத அளவிற்கு அங்கே வைக்க வசதி செய்வதைத்தான் குளிர்பதன இருப்பறை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 56, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

56–

ஊரகத் தொழில்கள்

***174–திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

2001 செப்டம்பர் 7]

(அ) மன்னார்குடி பகுதியில் ஊரகத் தொழில்கள் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி பகுதியிலே ஊரகத் தொழில்கள் தொடங்க வேண்டுமென்று கேள்வி கேட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் தந்திருக்கிறார்கள். மிகவும் வருத்தமாக இருக்கிறது. இருந்தாலும், உண்மையைச் சொல்லியிருப்பாரோ? இருந்தாலும் பரவாயில்லை. அந்த மாவட்டம் முற்றிலும் விவசாயத்தையே நம்பியிருக்கிற மாவட்டம். வேறு தொழில்கள் என்பதே இல்லாத காரணத்தினாலும் விவசாயத்தையே மூலப்பொருளாகக் கொண்டு தொழிலைத் தொடங்குவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தினாலும் மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்தப் பகுதியிலே அரசின் சார்பில் தொழில்கள் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே அரசின் சார்பாகத் தொழில்கள் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும்கூட தனி நபர்களோ அல்லது நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ தொழில்கள் தொடங்க முன்வந்தால் அதற்கான தனி நபர்களுக்காக விளிம்புத் தொகைத் திட்டம் என்று ஒரு திட்டத்தின் மூலமாக 10 இலட்சம் ரூபாயும், சங்கங்கள் என்றால் ஏறக்குறைய 25 இலட்சம் ரூபாயும் கடன் உதவி வழங்கி வருகிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 57, திரு. ப. அரசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.